இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
இறுதிப் பரீட்சை 2004/2005
ESP 1108 - கல்வி முகாமைத்துவம்
காலம் : மூன்று(03) மணித்தியாலங்கள்

702

திகதி: 23.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி I இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. "முகாமைத்துவம்" என்ற எண்ணக்கருவை ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்று தந்து விள்ககுக.

2. முகாமைத்துவத்துக்கும் நிர்வாகத்துக்கும் இடையேயான வேறுபாடு யாது?

3. "முகாமைத்துவச் செயன்முறையைச்" சுருக்கமாக விளக்குக.

4. பாடசாலைச் செயற்பாடுகளுக்குத் திட்டமிடலின் தேவைக்கான ஐந்து காரணங்கள் தருக.

5. உமது பாடசாலையின் வகையைக் கூறி ஒழுங்கமைப்பு மாதிரிப்படத்தை (organization chart) வரைக.

6. பாடசாலையொன்றின் பிரதி அதிபரின் ஐந்து முகாமைத்துவக் கடமைப் பொறுப்புக்களைக் குறிப்பிடுக.

7. பாடசாலையொன்றின் "வினைத்திறன்" , "விளைதிறன்" என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக.

8. சிகிச்சை மேற்பார்வை(Clinical Supervision) என்பதால் யாது கருதுகின்றீர்?

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. பாடசாலையொன்றின் விளைதிறனுள்ள முகாமைத்துவத்தில் பின்வரும் காரணிகளுள் மூன்றின் செல்வாக்கை விளக்குக.

(i) பாடசாலையின் மனிதவளங்கள்
(ii) பாடசாலையின் பௌதிகவளங்கள்
(iii) பாடசாலை - சமூக உறவு
(iv) அதிபரின் முகாமைத்துவ ஆற்றல்
(v) அதிபரின் கற்பித்தல் முகாமைத்துவம்

(20 புள்ளிகள்)

10. (i) இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்தம் கல்வி முகாமைத்துவத்தில் ஏற்படுத்திய விளைவுகளை விபரிக்குக.

(6 புள்ளிகள்)

(ii) தீர்மானம் எடுக்கும் வலுவை பாடசாலைமட்டத்துக்குப் பரவலாக்கியமைக்கான மூன்று காரணங்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

(7 புள்ளிகள்)

(iii) தீர்மானம் எடுக்கும் வலுவை பாடசாலை மட்டத்துக்குப் பரவலாக்கியமையினால் ஏற்பட்ட அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

(7 புள்ளிகள்)

11. (i) "விளைதிறனுள்ள பாடசாலை" ஒன்றின் நான்கு பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(4 புள்ளிகள்)

(ii) விளைதிறனுள்ள பாடசாலை ஒன்றில் அதிபரின் வகிபங்குச் செயற்பாடுகளை விபரிக்குக.

(8 புள்ளிகள்)

(iii) விளைதிறனுள்ள பாடசாலையொன்றை மதிப்பீடு செய்வதற்கான சரியீட்டுப்பட்டியல்(check list) ஒன்று தயாரிக்குக.

(8 புள்ளிகள்)

12. (i) இலங்கைப்பாடசாலைகளில் தற்போதுள்ள முகாமைத்துவப் பிரச்சினைகள் நான்கைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(ii) இலங்கைப்பாடசாலைகளில் காணப்படும் மேற்படி பிரச்சினைகளுக்கான காரணங்களை ஆராய்க.

(8 புள்ளிகள்)

(iii) மேலே நீர் குறிப்பிட்ட முகாமைத்துவப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சாத்தியமான அணுகுமுறைகளை முன்வைக்குக.

(8 புள்ளிகள்)

13. பின்வருவனவற்றுள் ஏதாவது மூன்று தலைப்புக்களில் சிறு குறிப்புகள் எழுதுக.

(i) பாடசாலை அபிவிருத்தி சபை
(ii) இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழு
(iii) பாடசாலை மட்ட முகாமைத்துவம்
(iv) சூழமைவு(situational) முகாமைத்துவம்
(v) பாடசாலை முகாமைத்துவத்தில் பாட இணைப்பாளரின் வகிபங்கு

(20 புள்ளிகள்)

14. (i) பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் பூரணப்படுத்த வேண்டிய மூன்று பிரதான பகுதிகளைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

(ii) அதிபர்களினதும், ஆசிரியர்களினதும் பயிற்சித் தேவைகளை எவ்வாறு இனம் காணுவீர்? விளக்குக.

(iii) பாடசாலை உத்தியோகத்தர்களுக்கு(staff) பயிற்சி அளிப்பதில் இலங்கைக் கல்வியமைச்சின் வகிபங்கைப் பகுப்பாய்வு செய்க.

(8 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)